# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**2023ஆம் ஆண்டு க.பொ.த. (உ /தர) (2024) இன்படி, மறுகணிப்பு செய்யப்பட்ட பெறுபேறுகள் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2023 /2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பரீட்சைத் திணைக்களத்தினால் 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 4ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2023ஆம் ஆண்டு க.பொ.த (உ /தர) பரீட்சைக்கான (2024) மறுகணிப்பு செய்யப்பட்ட பெறுபேறுகள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2023 /2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து **2024 ஒக்டோபர் 1 முதல் 2024 ஒக்டோபர் 8 வரையான** காலப்பகுதிகளில் ஆன்லைன் விண்ணப்பங்களை கோர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தீர்மானித்துள்ளது.

மேலும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது குறித்த மேலதிக விபரங்கள், UGC இன் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்ட 2023 /2024 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை கோருவது குறித்து முன்னர் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**

**2023 /2024 கல்வியாண்டின் விண்ணப்பதாரர்களுக்கு கற்கைகளுக்கான முன்னுரிமை வரிசையை மாற்றுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட இரண்டு வார கால அவகாசம் இச் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாது என்பதை நினைவில் கொள்ளவும்.**

**மேலும், முன்னர் குறிப்பிட்டதன்படி 2023 /2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு வழங்கப்படும் வாய்ப்பானது, குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் / வளாகம் உயர் கல்வி நிறுவகங்களால் ஏற்கனவே முடிவடைந்த தகுதிகாண் பரீட்சை / நடைமுறைப் பரீட்சைகளுடன் கூடிய கற்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்குப் பொருந்தாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**01.10.2024**

tamilguru.lk